(6 pages)

**7106/T11** **OCTOBER 2008**

தாள் 1 — இக்கால இலக்கியம்

---

(For those who joined in July 2003 and after)

Time : Three hours Maximum : 100 marks

பகுதி I — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

ஒரு சொல்/தொடரில் விடை தருக.

1. கண்ணனைக் கண்ணம்மாவாக விளித்துப் பாடியவர் யார்?

2. குடும்பவிளக்குத் தலைவியின் பெயர் என்ன?

3. ஆசியஜோதி எந்த நூலைத் தழுவி இயற்றப்பட்டது?

4. தைப்பாவையின் ஆசிரியர் யார்?

5. என் கைகள் வெறும் கைகளல்ல; கவிதைகள் என்றவர் யார்?

6. புரட்சிக்கவி எந்த வடமொழி நூலைத் தழுவி இயற்றப்பட்டது?

7. பெண் கல்வியின் தேவையை உணர்த்தும் கல்கியின் கதை எது?

8. சீதாவின் கணவர் பெயர் என்ன?

9. தொகுப்பு முகப்பு என்றால் என்ன?

10. 'மாசில்லாச் சுற்றுச்சூழல்' என்ற நூலில் எத்தனை கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன?

பகுதி II — (5 × 3 = 15 மதிப்பெண்கள்)

ஒரு பத்தி அளவில் விடை தருக.

11. (அ) எது நேரினும் அஞ்சாமை வேண்டும் என்பதைப் பாரதி எவ்வாறு பாடுகின்றார்?

(அல்லது)

(ஆ) திருமணம் பற்றிய நகைமுத்தின் கருத்து யாது?

12. (அ) சிறுவனிடம் புத்தர் கூறிய அமுத உரை யாது?

(அல்லது)

(ஆ) கலம்பகம் என்றால் என்ன?

13. (அ) மேத்தாவின் முன்னிலை உத்தித் திறனுக்குச் சான்று தருக.

(அல்லது)

(ஆ) தலைமை அமைச்சன் அரசனிடம் கூறியவை யாவை?

14. (அ) 'கைதியின் பிரார்த்தனை' என்ற கதையின் கருப்பொருள் யாது?

(அல்லது)

(ஆ) இராமதாஸ் பாத்திரப்படைப்பை ஜெயகாந்தன் எவ்வாறு அமைத்துள்ளார்?

15. (அ) அச்சுப் பொறிகளைப் பெறுவதற்கான முறை யாது?

(அல்லது)

(ஆ) சுற்றுச் சூழலைக் காப்பதில் சதுப்பு நிலக்காடுகளின் பங்கு என்ன?



பகுதி III — (5 × 6 = 30 மதிப்பெண்கள்)

ஒரு பக்க அளவில் விடை தருக.

16. (அ) பாரதி கலைமகளிடம் வேண்டுவன யாவை?

(அல்லது)

(ஆ) விருந்தோம்பலின் சிறப்பைக் குடும்பவிளக்கு வழி விளக்குக.

17. (அ) கவிமணியின் வருணனைத் திறனைச் சான்றுடன் நிறுவுக.

(அல்லது)

(ஆ) தைப்பாவையில் பயின்றுவரும் இலக்கியக் கூறுகள் யாவை?

18. (அ) அகவயக் கவிதைகளில் மேத்தா கூறும் கருத்துக்கள் யாவை?

(அல்லது)

(ஆ) அரசன் உதாரனுக்குக் கொலைத் தண்டனை வழங்கக் காரணம் என்ன?

19. (அ) பவானி பி.ஏ.,பி.எல் என்ற கதையின் கருப்பொருளை விளக்குக.

(அல்லது)

(ஆ) கதைக்குள் கதையமைக்கும் ஜெயகாந்தனின் திறத்தைச் சுந்தரகாண்டம் வழி விளக்குக.

20. (அ) கருத்துப்படமும் கேலிச்சித்திரமும் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) 'நிலத்தடி நீர்' பற்றி முகமது செரிபு கூறுவன யாவை?

பகுதி IV — (3 × 15 = 45 மதிப்பெண்கள்)

கட்டுரை வடிவில் விடை தருக.

21. (அ) பாரதியின் பக்திப்பாடற் பொருண்மையை விளக்குக.

(அல்லது)

(ஆ) குடும்பத்தலைவியின் பண்பு நலன்களைக் குடும்ப விளக்கு வழி விளக்குக.

22. (அ) கவிமணியின் கவித்திறத்தை ஆசியஜோதி வழி நிறுவுக.

(அல்லது)

(ஆ) கண்ணதாசனின் கவிதைச் சிறப்புக்களைத் தைப்பாவை வழி எழுதுக.



23. (அ) 'சுந்தரகாண்டம்' புதினத்தைத் திறனாய்வு செய்க.

(அல்லது)

(ஆ) செய்திக்களங்கள் பற்றிக் கட்டுரை வரைக.

---

DIRECTORATE OF DISTANCE EDUCATION
LIBRARY
Madurai Kamaraj University
ROC No:..........